# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ''மாத்தறைப் பருவம்'' அமைப்பு (கூட்டிணைத்தல்)

**மாத்தறைப் பருவம் அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ புத்திக பதிரண அவர்களால்*
*2016, சனவரி மாதம் 26 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.*

*(2016, சனவரி மாதம் 04 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

**[ 63 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## ''மாத்தறைப் பருவம்'' அமைப்பினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

''மாத்தறைப் பருவம் அமைப்பு'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அமைப்பொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட அமைப்புடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும், குறிக்கோள்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட அமைப்பு எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ள தாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ''மாத்தறைப் பருவம்'' அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம். சுருக்கப்பெயர்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''அமைப்பு'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மாத்தறைப் பருவம் அமைப்பின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர் களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத் துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''மாத்தறைப் பருவம் அமைப்பு'' எனும் பெயரின்கீழும், மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதோடு, அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென் பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும். மாத்தறைப் பருவம் அமைப்பினைக் கூட்டிணைத்தல்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :- கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் அவர்களது கல்வியினைப் பயனுள்ள விதத்தில் நிறைவேற்றுவதற்கு பாடசாலைச் சிறுவர்களுக்கு வசதிசெய்யுமுகமாக அந்நிறுவனங்களுக்கு பௌதீக மற்றும் தகுதியான உதவிகளும் ஆதரவும் வழங்கல் ;

(ஆ) உதவிகளைப் பெற்றுக்கொள்ளப் பொருத்தமான பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான விசேட உபகாரச் சேவைகளை நடாத்துதல், உதவி வழங்கல், பரிசில் வழங்கல், வாசிகசாலை வசதிகளையும் கற்றலுக்கு அவசியமான தூண்டுதல்களையும் வழங்கல் ;

(இ) புலமைப்பரிசில் பரீட்சைகள், க.பொ.த. (சாதாரணம்) பரீட்சை மற்றும் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சை போன்ற தேசியமட்டப் பரீட்சைகளில் தோற்றவுள்ள மாணவர்களுக்காக விசேட ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும், மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துதல் ;

(ஈ) ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளினது சேவைகளை மதிப்பீடு செய்தல், அவர்களது வேலையினை தொடர்வதற்கேதுவான சூழலை உருவாக்குதலும் பாராட்டு விழாக்களை நடாத்துதலும்

(உ) கிராமிய, மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் மாணவர்களினதும் இளைஞர்களினதும் விளையாட்டு, இலக்கிய மற்றும் கலைகள் போன்ற துறைகளிலான உள்ளார்ந்த திறமைகளை இனங்காணலும் அதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மூலமாக அவர்களின் உள்ளார்ந்த திறமைகளை முன்னேற்றிக் கொள்வதற்கேதுவாக தூண்டுதலளித்தலும் ;

(ஊ) பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் கலாசாரத் திறன்களின் அபிவிருத்தியின்பொருட்டு திறன்களை வெளிக்காட்டவும் மதிப்பீடு செய்யவும் ஏற்பாடு செய்தலும் திறமைபடைத்த மாணவர்களுக்கு விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கல் ;

(எ) விழுமியங்களையும் ஒழுக்கநெறிகளையும் மதிக்கின்ற, நடைமுறையில் செயற்படுத்துகின்ற மாணவர் தலை முறையினரை உருவாக்கத்தக்க வகையில் தனித்துவமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கல் ;

(ஏ) அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களையும் முன்பள்ளி ஆசிரியர்களையும், பயிற்றுவிப்பதற்கான செயலமர்வுகள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகளை நடாத்துதலும் புதிதாக முன்பள்ளிகளைத் தொடங்கத் தூண்டுதலும் ;

(ஐ) பல்கலைக்கழகங்களினதும் பாடசாலைகளினதும் சிரேட்ட மாணவர்களுக்காக தலைமைத்துவப் பழக்கங்கள் மற்றும் வாழப்பழகிக்கொள்வதற்கு அடிப்படையாக அமையத் தக்க தலைமைத்துவ பாசறைகளையும் செயலமர்வு களையும் அமுலாக்குதல் ;

(ஒ) துப்பரவேற்பாடு, சுகாதாரப் பழக்கவழக்கங்கள் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள், விளையாட்டு மற்றும் தேகப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்மூலமாக மாணவர் தலைமுறை யினரது உடல்ரீதியான ஆற்றல் மேம்பாட்டுக்காக பிரயோக நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல் ;

(ஓ) இலங்கையின் மரபுரிமைகள், சுற்றாடல், வனசீவராசிகள், சனத்தொகை, தேசப்பற்றினை விருத்திசெய்ய வழி சமைக்கின்றவாறான கல்விச் சுற்றுலாக்கள், சிரமதான இயக்கங்களை ஏற்பாடுசெய்தலும் நெறிப்படுத்தலும் ;

(ஔ) சாரணர் இயக்கம், சுற்றாடல் முன்னோடி அணியினர் மற்றும் பயிலிளவல் அணிகளைப் பாடசாலைகளில் உருவாக்குவதற்கான உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்குதல் ;

(க) மூத்த பிரசைகள் அமைப்புக்களால் ஈடேற்றப்படுகின்ற சேவை வசதிகளுக்கான உதவிகளை நல்குதலும் அவ்வமைப்புக்களுக்குத் தூண்டுதலளித்தலும் ;

(ங) தற்போது நடைமுறையில் இருக்கின்ற முறைசாரா கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், விசேட கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முதியோர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றுவதில் முழு ஒத்துழைப்பும் உதவியும் வழங்கல் ;

(ச) பாரம்பரிய மற்றும் ஏற்றுமதி விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற விவசாயிகளை ஊக்குவித்தலும் அவர்களுக்காக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும் ;

(ஞ) வேலையற்ற இளைஞர்களை சுயதொழில் செயற்பாடுகளில் ஈடுபடுத்துமுகமாக இவர்களுக்குத் தேவையான உதவிகள், ஒத்தாசை மற்றும் பயிற்சியை வழங்குதல் ;

(ட) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுக்கு இணையான குறிக்கோள்களைக்கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமைப்புக்களுடன் ஒத்துழைத்துச் செயலாற்றுதல் ;

(ண) மக்களின் அறிவு விருத்திக்கு அவசியமான கல்விசார் விரிவுரைகள் கருத்தரங்குகள் நிறைவேற்று செயற்பாட்டு வழிகாட்டல்கள், ஏற்புடைத்தான கண்காட்சிகள் மற்றும் கல்விசார் பிரசார நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தல் ;

(த) மாத்தறை மாவட்டத்தில் தோன்றி மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கியவர்களுக்காக மாத்தறை மைந்தர்கள் விருது வழங்கல் வைபவத்தை ஒழுங்குசெய்தல் ;

(ந) மாத்தறை மாவட்டத்தில் சுற்றாடல் மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஓரிடஞ்சார்ந்த தாவர மற்றும் விலங்கினங்களைப் பாதுகாப்பதற்கான விசேட கருத்திட்டங்களை அமுல்படுத்தல் ;

(ப) மேலே குறிப்பிட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான நன்மைபயக்கக்கூடிய அல்லது இடைநேர் விளைவானதாக அமையத்தக்க ஏனைய அனைத்து விதமான நடவடிக்கைகளையும் வழிமுறைகளையும் மேற்கொள்ளல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பட்டதாக கூட்டுத்தாபனம் பின்வருவனவற்றிற்கான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) வங்கிக் கணக்குகளைத் திறத்தல், செயற்படுத்தல் மற்றும் முடிவுக்குக் கொண்டுவருதல் ;

(ஆ) பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பின்றியோ பணத்தைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் ஏற்றுக்கொள்ளுதல் அல்லது சேகரித்தல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாக தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைக் குழுவால் தீர்மானிக்கக்கூடியவாறான வகையில் முதலீடு செய்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறானானதும் அந்நோக்கங்களுக்காக சட்டரீதியாககொள்ளக்கூடியதுமான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை கொள்வனவு செய்வதற்கும், கொள்வதற்கும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கவும், விற்கவும் அல்லது வேறுவகையில் பெறவும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறாக அதனைக் கையாளவும் அல்லது கையுதிர்க்கவும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஊழியர்களை நியமனம் செய்யவும், தொழிலுக்கமர்த்தவும் மற்றும் அவர்களைத் தொழிலிலிருந்து அகற்றவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியங்களை அவர்களுக்குச் செலுத்தவும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை எய்துவதற்கு அல்லது அதன் தத்துவங்களை பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது கூட்டுத்தாபனத்தின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது முகவர் ஊடாகவோ செய்யவும், புரியவும் அல்லது நிறைவேற்றவும் ; அத்துடன்

(எ) முகாமைக் குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறாக கூட்டுத்தாபனத்தின் எவையேனும் பணிகளை நிறைவேற்ற அவசியம் ஏற்படும்போதும் மற்றும் அவசியமாகின்றவாறும் மதியுரைச் சபைகள் குழுக்கள் அல்லது உபகுழுக்களை நியமிக்கவும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் தலைவர், முகாமைப் பணிப்பாளர், செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட கூட்டுத்தாபனத்தில் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைவாகத் தெரிவுசெய்யப்படுகின்ற ஆறு பேர்களுக்கு மேற்படாத எண்ணிக்கைகொண்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய முகாமைக் குழுவொன்றினால் இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைவாகவும் முகாமைசெய்யப்படல் வேண்டும்.

(2) முகாமைக்குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் வெற்றிடமொன்று உள்ளமை காரணமாக அல்லது அதன் உறுப்பினரொருவரை தேர்ந்தெடுப்பதில் அல்லது உறுப்பினர் பெயர்குறித்து நியமனம் செய்வதில் ஏற்பட்ட ஏதேனும் தவறு காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாகக் கருதப்படலாகாது.

(3) முதலாவது முகாமைக்குழு இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற முகாமைக்குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அம்முகாமைக் குழுவானது இச்சட்டத்தின் 6 ஆம் விதியின்கீழ் புதிய முகாமைக் குழுவொன்று தெரிவுசெய்யப்படும் வரை தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு, பின்வரும் எல்லாக் கருமங்களுக்காக அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றிற்காக, இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்திற்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களை தேர்ந்தெடுத்தல், அவர்கள் பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் உறுப்பினர்களின் தத்துவங்கள், நடத்தை மற்றும் கடமைகள் ;

(இ) முகாமைக் குழுவின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் அக்குழுவின் கடமைகள், தத்துவங்கள், நடத்தை, கடமைகள் மற்றும் முகாமைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்களின் நடத்தைகள், பணிகள், கடமைகள் மற்றும் தத்துவங்கள் ;

(உ) முகாமைக் குழுவின் கூட்டங்களைக் கூட்டும்போதும் நடாத்தும்போதும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைகள் மற்றும் அத்தகைய கூட்டங்கள் பற்றிய நேரங்கள், இடங்கள், அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல் அவற்றின் கூட்டநடப்பெண் மற்றும் அவற்றில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களின் நிருவாகமும் முகாமைத்துவமும், அதன் நிதியின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளின் பராமரிப்பும் மற்றும் கணக்காய்வும்; அத்துடன்

(எ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட எவ்விதியும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதுபோன்று அதேபோன்ற கூட்டத்திலும்அதேபோன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லா தொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

7. முகாமைக் குழுவின் செயலாளர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய இடாப்பொன்றினை வைத்துப் பேணுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் இடாப்பு.

8. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, அளிப்பு, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்றவாறு அல்லது வேறு ஏதேனும் வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாகவும், ஆற்றலுடையதாகவும் இருத்தல் வேண்டுமென்ப கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

துடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க அல்லது கொடுத்து மாற்ற வுமுள்ள முழுத் தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக் காகவும் மற்றும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாப னத்தின் விதிகளுக்கு அமைவாகவும் கூட்டுத்தாபனத்தால் வைத் திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டுமென்பதுடன், கொடைகள் மூலமாக அல்லது இறுதி விருப்பாவணக் கொடைகள் அல்லது மானியக்கொடைகள், நன்கொடை, உதவுதொகை அல்லது கட்டணங்கள் என்ற வகையாகக் கிடைக்கப்பெற்ற எல்லாப் பணங்களும் முகாமைக் குழு தீர்மானிக் கின்றவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் ஆதனங்களைப் புனருத் தாபனம் செய்யும், அபிவிருத்தி செய்யும் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக தேய்மான நிதியமொன்றை அல்லது கடனாழ் நிதியமொன்றைத் தாபிக்கலாம்.

(3) கூட்டுத்தாபனம் அதன் தத்துவம், கடமை மற்றும் பணி களை பிரயோகித்தலில், புரிதலில், நிறைவேற்றுதலில் கூட்டுத் தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவைக் கொடுத்துத் தீர்ப்ப தற்கான பணத்தொகைகள் யாவும் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

*பீடத்தினால் செலுத்தப்படற்பாலனவும் அதற்குச் செலுத்தப்பட வேண்டியனவுமான கடன்கள்.*

**10.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று அமைப்புக்குரிய எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத் தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பது டன், அந்நாளன்று அமைப்புக்கு வருமதியாகவுள்ள தனிசுகள், அமைப்புக்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகை களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத் தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பு வரையறை.

**11.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களை அல்லது பொறுப்புக்களை தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்திற்காக அவரிடமிருந்து வருமதியாக இருக்கக்கூடிய அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத்தை விஞ்சுகின்ற ஏதேனும் மேலதிக உதவு தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கணக்குகளும், கணக்காய்வும்.

**12.** (1) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காய்வாளர்கள் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று

எனப் பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**13**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் செயலாளர் அல்லது முகாமைக் குழு தீர்மானிக்கக்கூடியவாறான கூட்டுத்தாபனத்தின் வேறு இரு அங்கத்தவர்களின் முன்னிலையிலன்றி எச்சாசனத்திலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களின் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனங்கள்.

**14**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் அதன் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அதன் அல்லது அவற்றின் விதிகளின் படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான அல்லது தடை செய்யப்பட்டுள்ளனவையுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் முகாமைக்குழு உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்

**15**. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது ஏதேனும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**16**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்